**முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**

OS. No. 83/2015
பக்கம் 3
PW1 வெங்கடேசன்

**பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய தந்தை கண்ணையனுக்கு இரண்டு மனைவிகள் உள்ளனர். முதல் மனைவியின் பெயர் சுந்தரம்மாள் இரண்டாவது மனைவியின் பெயர் ஆண்டாள் ஆம்மாள் ஆகும். புஷ்பராணி, முனுசாமி, ஜகதா மற்றும் 1 பிரதிவாதி நடராஜன் ஆகியோர் முதல் மனைவியின் வாரீசுகள் என்றால் சரிதான். 2 வது மனைவிக்கு வாதிகள் மூவரும் ரமணி, மற்றும் கற்பகம் ஆகிய இரண்டு பெண் குழந்தைகளும் வாரிசுகள் ஆகும். என்னுடைய உடன் பிறந்த சசேகாதரிகள் கற்பகம் மற்றும் ரமணியை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதுபோல் முதல் மனைவியின் மகள்கள் புஷ்பராணி, ஜகதா மற்றும் மகன் முனுசாமி ஆகியோரையும் இவ்வழக்கில் ஒரு தர்பினராக சேர்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய தந்தையின் முதல்தாரத்து வாரிசுகளையும் என்னுடன் பிறந்த பெண் வாரீசுகளையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத காரணதினால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது)